மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 240 /2015

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். - திரு.எம்பெருமாள்
த/பெ. - திரு.சுப்பையா
கிராமம் - அரசன்குளம்
தொழில் - கூலிவேலை
தாலுகா - கயத்தார்
வயது - 32.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 16.04.1948ல் மலையாண்டிக்கோனாருக்கு சொக்கக்கோனார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 2ம்பிரதிவாதி செலுத்திய வீட்டிற்கான தீர்வை ரசீதுகள் எண்ணம்.20 பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 05.08.1993ல் 2ம்பிரதிவாதி சுப்பையாக்கோனாருக்கு, மலையாண்டிக்கோனார், கிருஷ்ணக்கோனாரும் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 15.10.2015ல் கயத்தார் கிராம நிர்வாக அலுவலர் ஸ்டேட்மெண்ட் தாவா 1வது தபசில் சொத்தை வாதி ஆக்கிரமித்தை குறித்து பார்வையிட்டு வழங்கிய சான்று பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(வாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | தபசில் வீட்டிற்கான 2025 ஆம்ஆண்டு செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் அசல் எண்ணம்.2 பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | தாவாச்சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு செலுத்திய மின்கட்டண ரசீது எண்ணம் 2 பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

முதல் விசாரணை தொடர்ச்சி - கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,

25.11.2025.